# இளைஞர்களுக்கான இயற்கை பேரழிவு குறைப்பு பற்றி ‘‘வாகாயாமா’’வின் அறிக்கை

பேரழிவு குறைப்பு கல்விக்கான ஆசிய இளைஞர்கள் பொதுமன்ற அமைப்பு நிலைக்குழு, வாகாயாமா ப்ரிபெர்ச்சுவல் கல்வி செயற்குழு, ஐக்கிய நாடுகளின் சமுதாய மற்றும் பண்பாட்டு கல்வி அமைப்பின் (UNESCO) ஆசியா மற்றும் பசுபிக் பண்பாட்டு மையம் (ACCU) மற்றும் இனமுறா - நோ - ஹி மன்றம் ஆகிய அமைப்புகளின் அமைப்பாளர் நடத்தும் ‘பேரழிவு குறைப்புக்கான ஆசிய இளைஞர்கள் உச்சி மாநாட்டில் ’’பலநாட்டின் இளைஞர் பிரதிநிதிகளாகிய நாங்கள், நவ. 2006 ஆம் ஆண்டின் இரண்டாம் நாளான இன்று வெளியிடும் அறிவிப்புகள் பின்வருமாறு;

1. ஒத்துழைப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் தொடர்ந்து ஏற்படும் இயற்கை பேரழிவு குறைக்கப்பட வேண்டும்.

2. பேரழிவிலிருந்து விடுதலை என்பது மனிதனின் அடிப்படை உரிமை ஆகும்.

3. பேரழிவு குறைப்பிற்கான பொறுப்பு மக்கள் அனைவருக்கும் உரியது.

4. பேரழிவு ஏற்படும் முன் அதைப் பற்றிய விழிப்புணர்வும், செயலூக்க முன்னேற்பாடுகளும் மிகவும் முக்கியம்.

5. முந்தைய பேரழிவுத் தாக்குதல் பற்றிய செய்திகள் அதன் மரபு பற்றிய அறிவு மேலும் அது பற்றிய ஆராய்ச்சி மற்றும் இவற்றைப் பற்றி உலகம் முழுவதும் மேற்கொள்ளும் கருத்துப் பரிமாற்றம் ஆகியன மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

6. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது என்பது உலகளவில் ஏற்படும் பேரழிவைத் தடுப்பதற்கும் அதனால் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கும் மிகவும் வேண்டியதாக உள்ளது.

7. பேரழிவால் ஏற்படும் மனித உயிர் இழப்பு, சொத்துக்களின் இழப்பு மற்றும் சுற்றுச் சூழல் பாதிப்பு ஆகியவற்றை நீக்க பேரழிவுப் பற்றிய கல்வித் தேவை.

8. பேரழிவு பற்றிய கல்வி நம் கல்வித் திட்டத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். மேலும் கல்வி மற்றும் கல்வி சாரா மாணவர்களுக்கு இக்கல்வி கிடைக்க கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

9. பேரழிவை குறைப்பதற்கான அறிவு அனைவராலும் பெறப்பட வேண்டும். குறிப்பாக குழந்தைகள், பெரியவர் மற்றும் ஆற்றல் குறைந்த நபர்களுக்கு இவ்வறிவு புகட்டப்பட வேண்டும்.

10. பேரழிவால் பாதிக்கப்பட்டவருக்குக் கொடுக்கப்படும் நெருக்கடி உதவிகள் பாதிக்கப்பட்டவர் எளிதாக அணுகத்தக்கதாவும் கிடைக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

11. பாதிக்கப்பட்டவர் வாழ்க்கையை மீட்டுத் தருதலும் புதுப்பித்து தருதலும் இன்றியமையாதவை. மேலும் அவர்களுடைய சமுதாயத்தை எதிர்பாராத விதமாக ஏற்படும் எதிர்கால பாதிப்பை ஏற்கும் வகையில் பாதுகாப்பான முறையில் மீண்டும் உருவாக்கித் தர தயாராக இருக்க வேண்டும்.

12. கரையை ஒட்டிய கல் அரண், பேரலையை முன்பே தெரிவிக்கும் ஒலி கருவி, பாதுகாப்பான இடத்திற்கு அழைத்து செல்லும் வசதி ஆகிய நடவடிக்கைகள் உரிய அரசாங்கத்தால் எடுக்கப்பட வேண்டும்.

13. அமைதியான மற்றும் பாதுகாப்பான உலகம் என்பது அனைவருக்கும் முக்கியமானதாகும்.

14. நமது அரசாங்கங்கள், ஐக்கிய நாடுகள் (UN), தேசிய அரசுசாரா அமைப்புகள் (NGO), அனைத்து சமுதாயம் மற்றும் உலகளாவிய இளைஞர்கள் குழு ஆகிய அமைப்புகள் பேரழிவைக் குறைப்பதற்காக கல்வி அறிவு வழங்கவும், இழப்பை எதிர்கொள்ள தம்மை தயார்ப்படுத்தி கொள்வதற்காகவும் மேற்கூறிய தீர்மானங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் மேலும் கையோடு கைகோர்த்து ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் ஆசிய இளைஞர்களான நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.